# Hemorrhage During Pregnancy
# கர்ப்பமாக இருக்கும்போது ஏற்படும் ரத்தப்போக்கு

கருவுற்றிருக்கும் தாய்க்கு சிறிதளவே ஆனாலும் உதிரம் காணும்போது ஒரு பயம் தோன்றுவது இயற்கை. அது எப்போதுவேண்டுமானாலும் நடக்கலாம்.. பொதுவாகா, ஐந்தில் ஒருவருக்காவது (15-20% சதவிகிதம்) முதல் 12 வாரங்களில் சிறிதளவு உத்திரம் படுவது இயற்கை. அதனால் பெரிய தவறு ஏதும் ஏற்படாது. ஆனால் உத்திரத்துடன் கடினமான வலியும் இருந்தால் அது என்னவென்று மருத்துவரிடம் ஆலோசிக்க வேண்டும் . அதுவே கருவுற்ற 3 மாதங்களுக்குப்பிறகு உத்திரம் படுமானால் இயற்கை என்று சுலபமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அதைப்பற்றிய விபரங்களை இப்போதுகவனிப்போம்

## முதல் 12 வாரங்களில் அல்லது 3 மாதங்களில் ஏற்படும் உதிரப்போக்குக்கு காரணங்கள் என்ன?

கருமுட்டையானது தாயின் கருப்பையினுள் ஒன்றி வளர ஆரம்பிக்கும். அப்படி கருப்பையில் ஒட்டி வளரும்போது, சிறு துளி உதிரம் வெளிப்படுவது இயற்கை. பொதுவாக இந்த வெளிப்போக்கு முதல் 30-45 நாட்களுக்குள் ஏற்படும். அதிகமாக வலி ஏதும் இருக்காது.அதைப்பற்றி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. சிலபெண்களுக்கு தான் கருவுற்றிருப்பதே தெரியாது. இந்த உதிரம் படுவது தனது மாதப்போக்கு என்று நினைதுக்கொள்வார்கள். உதிரம் படுவது 1-2 வாரங்களில் சரியாகிவிடும். படும் உதிரம் கருப்பாக இருந்தால் அதைப்பற்றி பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. மிகக்குறைவான ரத்தம் உள் தங்கி மெதுவாக வெளியே வருவதால் நிறம் மாறி வரும். கவலைப்படத்தேவையில்லை . சில சமயங்களில் ரத்தப்போக்கு சற்று அதிகமாக இருக்கும். அப்போது உங்களது மருத்துவர் செவி உணரா ஒளிக்கதிர்கள் ( ஸ்கேன்) மூலம் பரிசோதனை செய்து பார்த்து உங்களுக்கு விபரம் கூறுவார்கள். உதிரம் போனாலும், குழந்தையின் இருதய துடிப்பு சரியாக இருந்தால் பயப்படவேண்டிய அவசியம் இல்லை. குழந்தை எந்த குறையும் இல்லாமல் வளரும். கடினமான வேலை செய்யாமல் சற்று ஓய்வாக இருப்பது நல்லது. நடக்காமல் படுத்து இருப்பது நல்லது அல்ல. ஓய்வு நல்லது ஆனால் படுத்தே இருந்தால் அதுவும் ஆபத்தை விளைவிக்கலாம்

## ரத்தப்போக்கு அதிகமாக இருந்தாலோ அல்லது வலி அதிகமா இருந்திலோ என்ன செய்யவேண்டும்?

சிலசமயம் உதிரம் போவது அதிகமாகி அத்துடன் கடினமான வலியும் இருந்தால் அது கருச்சிதைவு ஏற்படும் அறிகுறியாக இருக்கலாம். உடனே மருத்துவரிடம் சென்று உள் பரிசோதனை செய்வது அவசியம். சந்தேகமாக இருப்பின், மருத்துவர் செவி உணரா ஒளிக்கதிர்கள் (ஸ்கேன்) மூலம் பரிசோதனை செய்தபிறகே உறுதி சொல்ல முடியும். இருதய துடிப்பு தெரியாவிடினும், கர்ப்பம் நன்றாக இருந்தால் ஒரு வாரம் கடந்து மீண்டும் பரிசோதை செய்து பார்க்க முடிவு செய்யலாம் .

சில சமயத்தில் கருச்சிதைவு ஏற்படும்போது முழு கருவும் தானாகவே வெளியில் வந்துவிடும். அப்போது வலி மிகவும் அதிகமாக இருஇருப்பதுடன், ரத்தப்போக்கும் அதிகமாக இருக்கும். அனால் கரு முழுதும் வெளியில் வந்தவுடன் ரத்தப்போக்ககும் வலியும் மிகவும் குறைந்துவிடும்.

சிலசமயங்களில், முழுதும் வெளிவராமல் பாதி உள்ள தங்கி அதிக ரத்தப்போக்கும் தொடர்ந்து அதிகமான வலியும் ஏற்படும் . அப்படி யிருந்தால் நீங்கள் உடனே மருத்துவரை அணுகவேண்டும். கொஞ்ச நேரத்திலேயே அளவுக்கும் அதிகமான ரத்தப்போக்கு ஏற்பட்டு, தாயிக்கு ரத்தம் கொடுக்க வேண்டி வர நேரிடலாம்.. அதிலும் தாயிக்கு ரத்தசோகை இருந்தால் கொஞ்சமனா ரதப்போக்கையும் தாங்கிக்கொள்ள இயலாமல் உயிருக்கு ஆபத்தும் ஏற்படலாம்.

பாதி வெளிவந்தாலும் அல்லது முழுதும் வெளிவந்தாலும் மருத்துவரை பார்ப்பது அவசியம். ஏன் எனில் கற்பத்தோடு சேந்த ரத்தநாளங்கள் துண்டிக்கப்படுவதால், கிருமிகள் அதன் வழியே ரத்தத்தில் கலந்து உடல் முழுதும் பரவ வாய்ப்பு உண்டாகலாம். இதுபோன்று நோய்பூச்சி தொற்றல் ஏற்பட்டாலும் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம். எனேவேதான் மருத்துவரை பார்ப்பது மிக அவசியம்.

## முதல் மூன்று மாதங்களில் ஏற்படும் ரத்தப்போக்கும் வலியும் ஏற்பட வேறு காரணங்கள் உண்டா ?

மிக சிறிய வாய்ப்புள்ள ஒரு காரணம் உண்டு..அது கருமுட்டை இடம் மாறி ஒட்டுவதால் ஏற்படும் அபாயம்.

இந்த நிலை ஏற்பட்டால் தாயின் உயிருக்கு மிக்க ஆபத்து ஏற்படும் . இந்த நிலையை எவ்வளவு சீக்கிரம் சிகிச்சை செய்யமுடியுமோ அவ்வளவு சீக்கிரம் சிகிச்சை அளிக்க வேண்டும். சீக்கிரமாக வந்தால், ஊசி மூலமாக மருந்து கொடுத்து அதை கரைய வைக்கலாம். நாள் தள்ளி போய்விட்டால் அறுவை சிகிச்சை மூலமே அதை சமாளிக்க முடியும். அறுவை சிகிச்சை செய்ய தாமதம் ஏற்பட்டால், தாயின் உயிருக்கு மிகுந்த அபாயம் ஏற்படும். அறுவை சிகிச்சை போதும் தாயிக்கு ரத்தம் கொடுக்க வேண்டிவரும்.

இந்த நிலைமை அடிக்கடி ஏற்படும் ஒன்று அல்ல.. கொஞ்சம் வலி இருந்தாலும், லேசான ரதப்போக்கு போனாலும், இந்த நிலைமையால்தான் என்று யாரும் பயப்பட கூடாது. ஆனால் கருத்தரித்த சில நாட்களில் வலி அதுவும் ஒருபக்கம் மட்டும் தொடர்ந்து இருக்குமானால், ரத்தப்போக்கு இருந்தாலும் இல்லையென்றாலும் உடனே மருத்துவரை பார்ப்பது நல்லது. மருத்துவர் ரத்த பரிசோதனை செய்தும், ஸ்கேன் எடுத்தும் இந்த நிலை இருக்கிறதா இல்லையா என்பதை முடிவு செய்வார்கள். இந்த பரிசோதனைகள் செய்யாமல் இந்த நிலைமை உண்டா இல்லையா என்று கூற முடியாது..

விரைவில் இந்த நிலமை இல்லை என்று கண்டுபிடிப்பது மிக அவசியம். உலகத்தில் தாய்மார்களின் உயிரிழப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். அதே சமயத்தில் கருவுற்ற பெண்கள் ஒரு சிறு வலி இருந்தாலும் தனக்கு இந்த நிலைமை இருக்குமோ என்று உடனே கவலைப்பட தேவையில்லை. அதுவும் முக்கியம். ஆனால் வலி தொடர்ந்து ஒரே இடத்தில் இருந்தால் மருத்துவரை பார்ப்பது மிக அவசியம்.

## மூன்று மாதத்திற்க்கு பிறகு ரத்தப்போக்கு ஏற்பட என்ன காரணம்?

வலியுடன் கூடி ரத்தம் கலந்த கோழை போன்று கருப்பையிலிருந்து வெளிப்படுமானாலோ, நீர்க்கசிவு ஏற்பட்டாலோ , குறை மாத பிரசவ வலியாக இருக்கலாம், அல்லது, குழந்தையை சுற்றியுள்ள நீர்கூடம் உடைந்திருக்கலாம்,ஏதாவது நோய்ப்பூச்சி தொற்றியிருக்கலாம். எனவே, இந்த அறிகுறிகள் தெரிந்தால் உடனே காலம் தாழ்த்தாது மருத்துவரை பார்க்கவேண்டும். மருத்துவர் பரிசோதித்த பின் அதற்கான சிகிச்சையை அளிப்பார்கள். இது மிக மிக முக்கியம்.

## இதற்கு வேறுஏதும் காரணங்கள் உண்டா ?

உண்டு.ரத்தப்போக்கு வலியுடன் சேர்ந்து இருக்குமானால் முக்கிய காரணம் நஞ்சு பிரிவதால் இருக்கலாம். அப்படி பிரிந்தால், அது தாயின் உயிருக்கும், குழந்தையின் உயிருக்கும் ஆபத்தாக முடியலாம். எனவே, உடனே மருத்துவரை அணுகவேண்டும் என்பது மிக முக்கியம்.
அப்படி பிரிய கர்ப்பகாலத்தில் ஏற்படும் முன்சூழ் வலிப்பு ஒரு முக்கியகாரணம். எந்த காரணத்தால் ஏற்பட்டாலும் இது ஒரு மிக முக்கிய அவசரமான அபாயம். உடனே மருத்துவமனைக்கு போகவேண்டும். இதுபோன்ற அறிகுறிகள் இருந்தால் டாக்டரை பார்க்க அவர்களது பார்க்கும் அறைக்கு போகாமல், உடனே ஆஸ்பத்திரிக்கு போகவேண்டும்
.

## இதை மருத்துவர்கள் எப்படி குணப்படுத்துவார்கள்?

மருத்துவர்கள் உடனே அவசர முறையில் பரிசோதித்து, குழந்தையின் நிலையையும் தாயின் நிலையையும் அறிந்து, வேண்டிய சிகிச்சை அளிப்பார்கள். நஞ்சு பிரிகிறது என்று தீர்மானித்தால் உடனே அறுவை சிகிச்சை

செய்து குழந்தையையும் தாயையும் காப்பாற்ற வேண்டிய தேவைகளை செய்வார்கள். காலதாமதம் ஆகாமல் டாக்டர்களும் தாதிகளும் ஒருங்குற்று வேலைசெய்வார்கள்.இந்த னிமையில், தாய்க்கும் குழந்தைக்கும் ரத்தம் கொடுக்க வேண்டிய ஆபத்தான நிலையம் ஏற்படலாம்.
இவ்வளவுக்கு பிறகும், குழந்தையை காப்பாற்ற முடியாமலலும் போகலாம்.

## நஞ்சு பிரிவதை தவிர வேறு என காரணங்கள் உள்ளன?

இதுமற்றும் அல்லாமல் 200 இல் ஒரு தாய்க்கு நஞ்சு, கருப்பையின் கீழ்ப்பகுதியில் ஒட்டி இருக்கலாம் . சாதாரணமாக நஞ்சு கருப்பையின் மேல்பகுதியில் ஒட்டியிருக்கும். அப்படி கீழ் பகுதியில் ஒட்டியிருந்தால், வலியே இல்லாமல் அதிக ரத்தப்போக்கு ஏற்படும். இப்படி யிருந்தாலும் வலி இல்லை என்று சுலபமாக எடுக்காமல் உடனே ஆஸ்பத்திரிக்கு வரவேண்டும். இதுவும் நஞ்சு பிரிவதுபோன்ற அவசர அபாயம்தான் . உடனே வந்தால், டாக்டர்கள் ஸ்கேன் எடுத்து இது உண்டு அல்லது இல்லை என அறிந்து என்ன செய்யவேண்டும் என்று எடுத்துரைப்பார்கள் . சிலசமயங்களில் குறைமாதமானாலும், குழந்தையையும் தாயையும் அறுவை சிகிச்சை செய்துதான் காப்பாற்றமுடியும் .

## ரத்தப்போக்குக்கு வேறு காரணங்கள் உண்டா ?

மற்றுமொரு காரணம் கர்ப்பப்பை கிழிந்து போகலாம். அதனாலும் அதிக ரத்தம் போகலாம். பல குழந்தைக்கு தாயான ஒரு பெண் மீண்டும் மீண்டும் கருத்தரித்தால் , கருப்பை பலகீனமடைந்து இந்த நிலைமை ஏற்படலாம். இதற்குமுன் அறுவைசிகிச்சை மூலம் குழந்தை பிறந்திருந்தால் அந்த உள் காயம் சரியாக ஆறாமல் பலஹீனமாகி அடுத்தமுறை பிரசவமாகும்போது அந்த இடம் பிரிந்து போகலாம். அத்துடன் வீட்டில் பிரசவிப்பது இதற்கு ஒரு முக்கிய காரணம். மருத்துவர்களின் கண்காணிப்பில் இந்த நிலைமை ஏற்படுவது மிக அரிது. எனவேதான் பிரசவத்திற்கு ஆஸ்பத்திரிக்கு வரவேண்டும் என்பது மிக முக்கியம் இந்த நிலைமை யாருக்கும் வரக்கூடாது. கீழை நாடுங்க்ளில், தாயின் உயிரிழப்புக்கு இது ஒரு முக்கிய காரணம்.

## இந்த பிரச்சனைகள் பற்றி மருத்துவர்களின் பொறுப்பு என்ன?

இந்த நிலைமைகள் எல்லாமே சரியான நேரத்தில், தாய்மார்கள் மருத்துவமனைக்கு வந்தால் மட்டுமே தாயையும் குழந்தையையும் காப்பாற்ற முடியும். அப்படியும் இதில் விளக்க முடியாத பல அபாயங்கள் உள்ளன. அதையும் தாய்மார்களும் குடும்பமும் புரிந்துகொள்ளவேண்டும். இதனால்தான் பெரியோர்கள் குழந்தைப்பேறு தாய்க்கு ஒரு மறுபிறப்பு என்று கூறுவார்கள். நான் இதை கூறுவதால் கர்பிணிபெண்கள் பயப்பட கூடாது. அனால் அதில்

உள்ள அபாயத்தையும் தெரிந்துகொண்டு மருத்துவரோடு ஒத்துழைத்தால் மட்டுமே நல்ல பலனை எதிர்பார்க்கலாம்.

இந்த கடினமான முயற்சி அனைத்தும் தாயின் உயிரையும் குழந்தையின் உயிரையும் காப்பாற்ற டாக்டர்களும் தாதியர்களும் படும் நித்திய போராட்டம். இதை நான் மருத்துவர் என்ற முறையில் எங்களை காப்பாற்ற சொல்லும் வார்த்தைகள் இல்லை. எங்கள் போராட்டம் சில சமயம் தோல்வியில் முடியலாம். அப்படி நடுக்குமானால் அது மருத்துவரின் தவறினால்தான் என்று நீங்கள் யாரும் நினைக்க கூடாது.. நாங்கள் யாரும் கடவுள் அல்ல என்பதை நீங்களும்  புரிந்துகொள்ளவேண்டும். டார்கள் யாராக இருந்தாலும் கடைசிவரை போராடி தாயையும் குழந்தையையும் காப்பாற்றவே முயற்சிப்பார்கள் அது நாங்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழி. அதற்கு தாய்மார்களான உங்கள் உதவியோடு மட்டுமே எங்கள் உறுதிமொழியை எங்களால் காப்பாற்றமுடியும்.